*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **23 ஜூலை 2026**

# பத்திரிகை செய்தி

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி “மை பாரத்” திட்டத்தின்கீழ், புதுச்சேரியில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேரந்த தன்னார்வ மாணவர்களுடன் துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் இன்று (23-07-2026) நடைபெற்றது. துணைநிலை ஆளுநருடன் கலந்துரையாடிய கல்லூரி மாணவர்கள் மத்திய அரசின் திட்டங்கள், தொலைநோக்குப் பார்வை, எதிர்கால இந்தியாவுக்கு வழிகாட்டுதல் குறித்த கேள்விகளை கேட்டு பதில் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஜிப்மர் மருத்துவமனையில் அளிக்கப்படும் உயர்தர மருத்துவ சிகிச்சை குறித்து தெரிந்து கொள்ள துணைநிலை ஆளுநருடன் சேர்ந்து மருத்துவமனையைப் பார்வையிட்டனர். மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள கேன்சர் சிகிச்கைக்கான லீனியர் ஆக்சிலரேட்டர், சிடி ஸ்கேன் கருவி போன்ற உயர் தொழில்நுட்ப சிகிச்சைக் கருவிகள் குறித்தும், சிகிச்சை முறைகள் குறித்தும் மருத்துவ அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில், ஏழை-எளிய மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான ஜிப்மர் போன்ற மருத்துமனைகள் ஆற்றி வரும் சேவையை சாமானிய மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், அவர்களுக்கு உதவ வேண்டும் என்று மாணவர்களை துணைநிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.